**பள்ளேபொல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பள்ளேபொல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபை முதலீட்டுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 48,975 மீதிக்கு ஆண்டிற்கான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் தினமன்று அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இரண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,142,635 பெறுமதியான தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குழாய்க் கிணறொன்றை நிர்மாணிப்பதற்கு சபை நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட ரூபா 625,048 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகள் சரிசெய்வதற்கு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.. | 2020 ஆம் ஆண்டின் போது தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | ரூபா 115,540,507 தொகை பெறுமதியான கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் போது தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காணப்படும் கூட்டுப் பெறுமதி ரூபா 56,059,395 தொகையான 2 விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்கு உரிய உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளிடையே ரூபா 1,868,441 ஆன வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகள் அடையாளம் காணப்பட்டு சரி செய்யப்படல் வேண்டும். | உப பதிவேடுகளில் விடுபட்டிருத்தல் மற்றும் நாளேட்டுக் குறிப்புகள் மூலம் சீராக்கம் உள்ளடக்கப்படாத காரணத்தால் இந்த வேறுபாடு தோன்றியிருக்கிறது. |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) கிடைக்கப் பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டுகள் 5 இற்கும் கூடுதலான காலம் கடந்த கிடைக்கப் பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 19,051 ஆகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய பணத் தொகைகள் அறவிடப்படல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். உரிய நிலுவைத் தொகையை வருங்காலத்தில் அறவிடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ஆண்டுகள் 1 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்ட செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 724,119 ஆகக் காணப்பட்டது. | உறுதியாக இனம் காணப்பட்ட தகவல்களைக் கொண்டு கணக்கீடு செய்யவும், செலுத்தப்பட வேண்டிய பணத்தை செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தொடர் வேலையாக்கப்பட்ட கடன் கொடுத்தோர் செய்த பணிகள் நிறைவடையாத காரணத்தால் சபை தீர்மானத்தை எடுத்து வருங்காலத்தில் அப் பணத் தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ரூபா 21,163,390 தொகை கூட்டுப் பெறுமதியான 03 கணக்குகளுக்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளுக்கு உரிய உப பதிவேடுகள் தயார் செய்யப்படல் வேண்டும். | பொருள் பதிவேடுகள், பொருத்தல் பதிவேடு மற்றும் சொத்துக்கள் பதிவேடு |

1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், நிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78 (1) ஆம் பிரிவு | சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் விற்பனை நிலையங்களின் உணவு மாதிரிகளைப் பரிசோதித்தல் மற்றும் அதில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகள் உடனடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். | உணவு மாதிரிகள் அனுராதபுர தரக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அனுப்பப்படுவதோடு, அந்த அறிக்கைகளின் தாமதம் காரணமாக வழக்கு பதிவு செய்ய இயலாமல் உள்ளது. |
| (ஆ) | 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சபை சட்டத்தின் 21 ஆம் பிரிவு | கடந்த 4 ஆண்டு காலப் பகுதிக்குள் முன் வைக்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாணங்கள் தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் 369 இல் 202 இற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 27 இற்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. | இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும் என்பதோடு, அனுமதி அங்கீகரிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | இலங்கை சனநாயக சொசலிசக் குடியரசின் நி.பி 571(3) | தீர்வு செய்யப்படாத 4 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 281,103 ஆன பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | தீர்வு செய்யக்கூடிய வைப்புக்களை விரைவில் தீர்வுசெய்ய வேண்டும் | வருமானதிற்கு செலவு வைப்பதற்காக நிதிக்குழு தீர்மானித்துள்ளதாக அறிய தருகின்றேன் |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | 4 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,782,172 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,422,916 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா று மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 850,000 | 1,119,404 | 830,011 | 289,393 | 882,000 | 1,113,177 | 896,750 | 216,427 |
| (ii) | வாடகை | 9,648,000 | 1,584,004 | 1,596,929 | 124,937 | 4,336,000 | 235,400 | 138,100 | 137,862 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள | 510,000 | 683,885 | 675,885 | 8,000 | 800,000 | 670,870 | 671,870 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,833,544 | 40,085,952 | 35,745,916 | 4,340,016 | 43,318,101 | 51,519,394 | 31,839,269 | 19,680,125 |
| | மொத்தம் | 56,841,544 | 43,473,245 | 38,848,741 | 4,762,346 | 439,199,101 | 53,538,841 | 33,545,989 | 20,034,414 |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விற்பனை நிலையத் தொகுதியில் 04 கடைகள் ஒழுங்கற்ற விதத்தில் விலை மனுக் கோரப்பட்ட காரணத்தால் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தக் கடைகள் மூடப்பட்டுக் காணப்பட்டதோடு, அதனால் ரூபா 108,500 தொகை சபை நிதிக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | உடனடியாக விலை மனுக் கோரப்பட்டு கடைகளை ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஒழுங்கான விதத்தில் விலை மனுக் கோரி கடைகளை குத்தகைக்கு வழங்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளடமிருந்தும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 679,062 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,175,103 ஆகவும் இருந்தது. | பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 சனவரி 09 இல் நீதிமன்ற தண்டப் பணத்தில் ரூபா 211,247 தொகையும் மத்திரைக் கட்டணங்களில் ரூபா276,500 தொகையும் கிடைத்துள்தாக அறிய தருகின்றேன். எஞ்சிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) எதிர்பார்த்த விளைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்ளாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னய ஆண்டில் திட்டமிடுதல் இல்லாமலேயே 49 திட்டங்களுக்காக ரூபா 12,500,000 பெறுமதியான கற்பனைத் தொகை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு, அவற்றுள் 24 திட்டங்களுக்கு உரிய பெறுமதி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைகள் கண்டறியப்பட்டு அவதானத்தோடு மற்றும் உரிய கவனத்தோடும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, ஆண்டின் தொடக்கத்திலிருந்து திட்டமிட்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2019 ஜுன் 14 ஆம் திகதி வரை சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என்பதால் வெளியே இருந்து கிடைக்கப் பெற்ற ஏற்பாடுகளுக்கு முன்னுரிமையை வழங்க நேர்ந்தது. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி *NP/SP/SDG/17* ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணப்படாமல் இருந்ததுடன் திட்டங்கள் எவையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்த தட்டமிடப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையினால் இயக்கப்படும் நீர் விநியோகத் மூலங்களில் நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், அவற்றில் கோலி.்.போம் பக்டீரியா மற்றும் இ.கோலை பக்டீரியம் ஆகியவை செறிவாக இருந்தன. | உரிய தரத்தினைக் கொண்ட தூய்மையான குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நீர் விநியோகத் திட்டங்களில் குளோரினைப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, வருங்காலத்தில் குளோரினேடர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | 11 காணிகள், 12 கல்லறைகள் மற்றும் 2 பொதுக் காணிகள் ஆகியவற்றின் சட்டபூர்வமான உரிமையை உறுதிப்படுத்தும் உரித்து அல்லது கையளிப்புக்கள் காணப்படவில்லை. | உரிமையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | உரிய நிறுவனங்களிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.3 மனித வள நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பினனிணைப்பு 02 மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேசத்தில் அமைந்துள்ள 04 காணிகள் உரிய அனுமதி இல்லாமல் துண்டுகளாக்கி விற்பனை செய்ய இடமளிக்கப்பட்டிருந்தது. | சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய வரித் தொகையை அறவிட சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) துண்டு பிரித்து விற்கப்பட்ட காணிகளின் பெறுமதியின் மொத்த மதிப்பீட்டில் நூற்றுக்கு 1 வீதம் வரித் தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், 1987 இலக்கம் 15 உடைய பிரதேச சபை சட்டத்தின் 154 (1) ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை செய்யப்பட்டதன் பிறகான பெறுமதி மதிப்பீட்டில் 1 சதவீதம் வரித் தொகையைக் கணக்கிட்டு அதை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப் வேண்டிய வரிப் பணத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளைச் செலுத்துமாறு விற்பனையாளர்களுக்கு எழுத்து மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் நிர்வாகம்**

**விளைவற்ற / குறைப் பயன்பாட்டிலான சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான ரூபா 16,861,440 தொகை பெறுமதியான இயந்திரங்கள் 02 மற்றும் வாகனங்கள் 4 என்பன 5 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக செயலற்றுக் காணப்பட்டன. | பாவனைக்கு எடுக்கக் கூடிய நிறுவனமொன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த இயந்திரத்தை தண்ணீர் பவுசரொன்றுக்கு மாற்றிக் கொள்ள அமைச்சு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறியத் தந்துள்ள போதிலும், இது வரையில் இது நிறைவேற்றப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பழைய நூலகக் கட்டிடமொன்று 10 ஆண்டுகளாகவும், சமூக மண்டப கட்டிடமொன்று 3 ஆண்டுகளாகவும் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | அக் கட்டிடங்கள் பயனுள்ள விடயங்களுக்கு உபயோகப் படுத்தப்படல் வேண்டும். | சம்பந்தப்பட்ட கட்டிடங்களை நவீன மயப்படுத்தி பாவனைக்கு எடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |
| (இ) | மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 38,149 மீதித் தொகையானது 2013 ஆம் ஆண்டிலிருந்து செயலற்ற நிலையில் காணப்பட்டது. | நடப்புக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அடுத்த ஆண்டில் உத்தியோக பூர்வ நடப்புக் கணக்கிற்கு மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |
| (ஈ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,075,637 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கடைகளை எவ்விதப் பாவனைக்கும் எடுக்காமல் மூடி வைக்கப்பட்டிருந்தன. | பயனுள்ள விடயங்களுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருங்காலத்தில் இக் கடைகளை வியாபார நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் இயங்கிக் கொண்டிருந்த இறைச்சி கூடத்துக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரிகளின் மேற்பார்வை முறையாக மேற்கொள்ளப்படுவதோடு, சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை வருங்காலத்தில் எடுப்பேன். |
| (ஆ) | ரூபா 3,478,136 ஆன கடன் கொடுத்தோர் பெறுமதியானது முறையான அனுமதி இல்லாமல் பதிவழிக்கப்பட்டு இருந்தது. | பதிவழிப்பதற்கு முறையான அனுமதி பெறப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

3.7 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெகோ இயந்திரமானது 2015 ஆம் ஆண்டில் விபத்துக்கு உள்ளான போதிலும் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் செய்யப்பட்ட விசாரணையின் அறிக்கையை இது வரையில் சபைக்குப் பெற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு ரூபா 669,648 தொகை இழப்பை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை உடனடியாகப் பெற்றுக் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | விசாரணை அறிக்கையை பிரதான அமைச்சிடமிருந்து இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை |

3.8 **பெறுகை**

**3.8.1 பெறுகை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் கொள்முதல் வழிகாட்டல் கையேடு 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் முதன்மை கொள்முதல் திட்டமொன்றும், சிவில் பணிகள், பொருட்கள் மற்றும் பிற சேவைகள் உள்ளிட்ட விரிவான கொள்முதல் திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டும் எனினும், கொள்முதல் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்கு வெளியே ரூபா 3,278,640 பெறுமதியான தொகைக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல் கையேடு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டுக்கென திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.8.2 ஒப்பந்த நிர்வாகம்

--------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | ----------------------- | ------------------------- |
| (அ) | மில்லவான பன்கொல்ல பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 398,949 தொகை செலவு செய்து ஒன்றுடன் ஒன்று பிணைந்த முகட்டுக் கல் பதித்த பாதையின் இரு மருங்கிலும் 1:2:4 (20mm) கொங்கிறீட் கலவையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு விளிம்பு வரம்புக் கற்கள் இலகுவாக உடையக் கூடிய பலவீனமான கொங்கிறீட் கலவையைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த காரணத்தால் பாதுகாப்பு விளிம்பு வரம்புக் கற்கள் அநேகமான இடங்களில் வெடித்திருந்ததோடு முகட்டுக் கற்கள் உரிய தரத்தில் இருக்கவில்லை. | நியமங்களுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பாக, அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்படல் வேண்டும். | வருங்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் நிகழாமல் இருக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ஆரியகம சமகி சமூக அடிப்படையிலான அமைப்பிற்காக குழாய்க் கிணறொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 48,875 தொகை செலவு செய்து தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் புவியியல் ஆய்வொன்று நடத்தப்பட்டிருந்தது. அந்த ஆய்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 70 மீற்றர் ஆழத்தில் சாதாரண அளவீட்டு முறையைப் பயன்படுத்தி கிணறொன்றை நிர்மாணிக்க ரூபா 625,048 தொகையை தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கொடுப்பனவு செய்ததன் பின்னர் சபையினால் குழாய்க் கிணறொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பின்னர் தண்ணீரின் அளவு போதிய அளவில் இல்லை என்பதை உறுதிப்படுத்தி அச் செயற்திட்டம் தோல்வியுற்றதாக அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. | சரியான திப்பீடொன்றின் மூலம் நீர் டூலாதாங்கள் கண்டறியப்பட வேண்டும். | தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபையினால் துல்லியமான சாத்தியக் கூறு ஆய்வு நடத்தப்படவில்லை. எவ்வாறாயினும், அரச நிறுவனமொன்றுக்கு அந்தப் பணத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பதால் அது பயனற்ற கொடுப்பனவாக இல்லை என அறியத் தருகிறேன். |